[illegible]
[illegible]
[illegible]



உ

சிவமயம்.

தோப்பலாக்கரை என்னும் ஆதிகுளத்தூரில்

எழுந்தருளிய

ஸ்ரீ இரங்கு முத்தம்மன் மீது திருப்பதிகம்.



இராமநாதபுரஞ் சமஸ்தானம் கமுதித்தாலூகா

மண்டபசாலை போஸ்டு

சுத்தமடங்கிராமத்தில் வசிக்கும் சங்கீதசாகித்ய மகா

வித்வரத்தின விஸ்வப் பிர்மஸ்ரீ

சி. சின்னச்சாமி ஆச்சாரியாரவர்கள் குமாரர்

[illegible]ன்னச்சாமி ஆச்சாரியார்

[illegible]யெற்றியது.

[illegible]மில் அச்சிடப்பெற்றது.

[illegible]930. அணா 1

உ

சிவமயம்

சாற்றுக்கவி

இராமநாதபுரஞ் சமஸ்தானம் கமுதித் தாலூகா கீழரா
நதியில் வசிக்கும் மகா வித்வான் வடுகநாத பிள்ளை
யவர்களியற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

உலகமெலாம் படைத்தளித்தெவ் வுயிர்க்குமுயி ராகி யுணர்
வாகி யாளு
மிலகிரங்கு முத்தனையா யாதிருளத் தூரிரவிக்
கினிமை சால
நலதமிழா லோற்பதிகம் நன்கூறைத் தானெழில் சுத்த
நகர்வாழ் பத்தன்
பலகலைதேர்க் தோன்விஸ்வ குலசின்னச் சாமியெனும்
பாவலோனே

அருப்புக்கோட்டைத் தாலூகா பாலவநத்தம் போஸ்டு கூத்திப்பாறையென்னும் நல்லூர் மதுரகவி விஸ்வப் பிர்மஸ்ரீ முத்துகிருஷ்ண ராமாநுஜாச்சாரியாரவர்கள் இயற்றிய கலிவிருத்தம்.

அன்னச்சால் வயலாகி குளத்தூர் மின்
என்னத்தோன்று மிரங்கு முத்தாள் மிசை
சின்னச்சாமி பதிகஞ் செய்தானரும்
கன்னற் கட்டி கரும்பமிழ் தென்னவே

திருநெல்வேலிஜில்லா கோவிற்பட்டித் தாலூகா அயன் வெம்பூர் கிருமத்தில் வசிக்கும் சங்கித வித்வான் ச. தங்கவேலாச்சாரியாரவர்கள் இயற்றிய

வெண்பா.

சென்னல் செறிந்தோங்கும் திவ்யபதி யாதிகுள
நன்னகரி ரங்கு முத்தாள் நாயகிமே லின்பப்பா
சுத்தநகர் விஸ்வகுலத் தோன்சின்னச் சாமிசொன்னான்
முத்தர்புகழ்ந்தே மகிழ வே

ஸ்ரீ

இரங்குமுத்தம்மன் மீது திருப்பதிகம்.

வெண்பா.

ஆதிகுளத் தூர்வாழு மம்மை யிரங்கு முத்தாள்
தாதிலகு பூங்கமலத் தாளிணையின் மீதில்
பதிகஞ் சொலக்கருணை பாலிப்பாய் யெங்க
ணிதிகந்த வேடணைவனே

அறுசீர்க்கழில்நெடிலடி யாசிரிய விருத்தம்.

திருவே ஞான சின்மயமே தெவிட்டா வமுதே
திகழ் விளக்கே
அருவே யுருவே யருவுருவே யனந்தா னந்த
வாரமுத்த
கருவே கருணசாகரமே காளகண்ட
னுயிர் துணையே
இருவே ராதி குளத்தூர்வா ழிரங்கு முத்தா
ளினிதருளே (1)

சீர்கொண் டறிவா யெங்கணு நீ சிறப்புற் றோங்கு
மெய்ப்பொருளே
கார்மங் காமை குழற்பாவாய் கனிவாய் நுதலை
பசுங்கிளியே
நேர்பண் ணோங்கும் மெய்த்தவமே நிலது திருத்தாட்
டொண்டு செய்வேன்
ஏற்றல் லாதி குளத்தூர்வா ழிரங்கு முத்தா
ளினிதருளே (2)

கறைவான் புவியெல் லாமீன் றுங் கன்னியாகி
நின்றவளே
குறைவி லாயூ ராரோக்யங் கூர்த்தசெல்வம்
பெறவேண்டி
நறைவார் கமலத் திருவடிகள் நம்பி நின்னைச்
சரண்புகுந்தேன்
இறைவி யாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா
ளினிதருளே (3)

சங்க மணிக்கா லறிஞர்தபோ தனர்வா னோர்கள்
புகழ்ந்தேத்துந்
திங்க ணுதற்கார் நிகரளகச் சேற்கண் வேய்த்தோள்
மடப்பிடியே

சிங்க மீதி லேறிநிதஞ் ஜெகதண்டங்க ளெலாமுலவு
மெங்க ளாதி குளத்தூர்வா ழிரங்கு முத்தா
ளினிதருளே (4)


கனியே வானோர் கற்பகமே காமதேனே புத்தமுதே
தொனிசேர் சங்க மானிதியே தூபதீப நிவேதனமே
புனிதமாலோன் சோதரியே புராரிபாகப் பசுங்
கொடியே
இனிதா மாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா
ளினிதருளே (5)


கந்தங் கமழுங் குழற்பாவாய் கருணைபூத்த
விழியணங்கே
சந்தங் கமழுந் தனகலசத் தளிர்மெல்லடியாய்
சங்கரியே
தொந்த வினைகழுகன் றொழியச் சுகானுபோ
கமேவளர
எந்தமாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா
ளினிதருளே (6)

பொங்கராவு கங்கைமதி புனையுங் குஞ்சிச்
சடைப் பெருமான்
பங்கிலுறையும் பசுங்கிளியே பத்தரிதையங்
கலந்தவளே
சங்கபாணி சகோதரியே தாரகாவி நாசனியே
எங்களாதி குளத்தூர்வா ழிரங்கு முத்தா
ளினிதருளே (7)
மாதா நீயே பிதாநீயே மற்றுஞ் ஞான குரு நீயே
வேதா முதலாம் வானோர்கள் வேதபாராயண முனிவர்
சாதாரணமா யடைவரிய சான்றயோக சிகாமணி நீ
யேதானாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா
ளினிதருளே (8)
ஒளிருங் கருணை நவமணியே உமையே யகண்ட
பூரணியே
தளிர்மென் றோட்டு கர்பகப்பூத் தருவினீழ
லோர்கரிதாய்
தெளிவாயுன்றன் மலரடியைத் தியானஞ் செய்யுத்
திருவடியார்க்
கெளியா யாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா
ளினிதருளே (9)

திடமாயுனது திருவருளை சித்தத் திருத்தும்
பத்தர்தமக்
குடனே வெளியின் மலையெனவே யுகந்து காட்சிப்பே
றளிப்போய்
விடமே போலுங் கொடியவினை வேதனைக்குட்படச்
சகியேன்
இடநிலாதி குளத்தூர்வா ழிரங்குமுத்தா (10
வினிதருளே.

முற்றிற்று.





உ

சிவமயம்.

விக்ஞாபனம்.

உலகசம்பந்த மகாஜன சமுகங்களுக்குத் தெரிவிப்பது யாவதெனில் என் தந்தையவர்களாளியற்றிய பேரின்பரசக்கீர்த்தனை சரஸ்பதி தேவிமீது நான் மணியாலை ஆனந்தவல்லியம்மை மீது ஸ்தோத்திரப்பாக்கள் என் சிறிய தந்தையவர்கள் சோதிடங் குருசாமி ஆச்சாரியாரவர்கள் மீது சரமகவிகள் எம்மால் இயற்றிய காமாக்ஷியம்மன் மீது முறைச்சிந்தவழி நடை கொம்மி எமதிடம் பெற்றுக் கொள்ளலாம்.

இங்ஙனந்

தங்களன்புள்ள

☞ S. S சின்னச்சாமி ஆச்சாரி,

சுத்தமடம்.

மண்டபசாலை போஸ்டு.